இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 03-06-2025

# எளிமை ஆளுமை!

எளிமையே அழகு என்பார்கள். எளிமையே ஆளுமை என்பதைத் தொடர்ந்து மெய்ப்பித்துக் கொண்டிருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

**மக்களுக்காக உழைத்து - மக்களுடனே வாழ்ந்து - மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு - மக்களாட்சியை நடத்தி வருகிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். தமிழ்நாட்டின் ஒவ்வொரு குடும்பத்தின் கோரிக்கையையும் கேட்டுக் கேட்டு நிறைவேற்றித் தரும் மக்கள் முதலமைச்சராகச் செயல்படும் மாண்புமிகு முதலமைச்சரின் தொலைநோக்குத் திட்டங்கள் அனைத்தும் தமிழ்நாட்டை தினமும் உயர்த்திக் கொண்டே செல்கிறது.**

சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக ஒவ்வொரு தொகுதிக்கும் சென்று மக்களின் கோரிக்கைகளை தி.மு.க. தலைவராக தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் திரட்டினார்கள். 'திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிப் பொறுப்பேற்ற 100 நாட்களில் உங்களது கோரிக்கைகள் அனைத்தையும் பரிசீலித்து சாத்தியமான அனைத்து திட்டத்தையும் உருவாக்கித் தருவேன்' என்று வாக்குறுதி தந்தார்கள்.

"இந்த இடத்துக்கு வந்த உடனே அனைவரும் தங்கள் குறைகளை முன்பதிவு செய்ய ஏற்பாடுகள் செய்திருந்தேன். அந்த முறைப்படி உங்கள் குறைகளை எழுதிக் கொடுத்திடீங்களா? அதுக்கு .... இந்த மாதிரி ஒரு ரசீது கொடுத்தாங்களா? அந்த ரசீதை வாங்கிட்டீங்களா? காட்டுங்க! அப்படி யாராவது ரசீது வாங்காம இருந்தீங்கன்னா... இந்தக் கூட்டம் முடிந்ததும் போய் ரசீதை மறக்காம வாங்கிக் கோங்க! அது சாதாரண ரசீது மட்டுமல்ல. அதை வைத்து நீங்கள் என்னைக் கேள்வி கேட்கலாம். அதற்காக உரிமை சீட்டு அது" என்று அக்கூட்டத்தில் தலைவர் அவர்கள் சொன்னார்கள்.

**"100 நாளில் உங்கள் குறைகளைத் தீர்ப்பேன். இல்லாவிட்டால் என்னைக் கேள்வி கேட்கலாம்" என்ற உரிமையை மக்களிடம் கொடுத்திருக்கிறார் தலைவர்.**

"கண்களில் கனவுகளோடும் கையில் மனுக்களோடும் இதயத்தில் ஏக்கத்துடனும் - இந்த அரங்கத்தை நோக்கி வந்திருக்கும் உங்களது நீண்ட காலப் பிரச்சினைகளுக்கு என்னால் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் நீங்கள் வந்திருக்கிறீர்கள். நான் ஆட்சி அமைத்தால் 100 நாளில் உங்கள் பிரச்சினையைத் தீர்ப்பேன்" என்று அப்போது வாக்குறுதி அளித்தார்.

**மாண்புமிகு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் - 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' என்ற தனித்துறையை உருவாக்கி அவை அனைத்தையும் வேண்டுகோள்களை நிறைவேற்றியும் வைத்த சாதனை முதலமைச்சர் தான் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள்.**

அடுத்தடுத்து வரும் மனுக்களை பரிசீலித்து தீர்வு காண, 'முதல்வரின் முகவரி' என்ற தனித்துறையை உருவாக்கினார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். முதல்வரின் முகவரித் துறை என்ற துறையின் கீழ் கடந்த மூன்றாண்டு காலத்தில் 68 லட்சத்து 30 ஆயிரத்து 281 மனுக்கள் பெறப்பட்டன. அதில் 66 லட்சத்து 25 ஆயிரத்து 304 மனுக்களுக்கு உரிய முறையில் தீர்வு காணப் பட்டுள்ளது. மக்களாட்சியின் மாபெரும் சாதனை இது.

இதைத் தொடர்ந்து மக்களுடன் முதல்வர் என்ற திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். பொதுமக்கள் அதிகமாகத் தொடர்பு கொள்ளும் 13 அரசுத் துறைகள் தொடர்பான கோரிக்கைகளை மட்டும் முகாம்கள் மூலமாகப் பெற்று அந்த கோரிக்கைகள் 30 நாட்களுக்குள் நிறைவேற்றித் தரப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். முதலில் நகராட்சிப் பகுதியில் இந்த முகாம்கள் நடத்தப்பட்டன. அடுத்து ஊராட்சிப் பகுதியில் மக்களுடன் முதல்வர் திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

கோரிக்கை மனுக்களை அரசாங்கமே மக்களது இருப்பிடத்துக்குச் சென்றுவாங்கவேண்டும்என்றுமுதலமைச்சர்அவர்கள்நினைத்தார்கள். அதற்காக உருவாக்கப்பட்டது தான், 'மக்களுடன் முதல்வர்' என்ற திட்டமாகும். இதோ இப்போது 'எளிமை ஆளுமை' என்ற திட்டத்தை கடந்த 29 ஆம் தேதியன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார்கள்.

**தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் சுகாதார சான்றிதழ், பொது கட்டிட உரிமம், முதியோர் இல்லங்கள் உரிமம், பணிபுரியும் மகளிருக்கான தங்கும் விடுதிகள் உரிமம், மகளிர் இல்லங்கள் உரிமம், சொத்து மதிப்பு சான்றிதழ், வெள்ளை வகை தொழிற்சாலைகள் பட்டியல், புன்செய் நிலங்களை விவசாயம் அல்லாத செயல்பாட்டிற்கு பயன்படுத்த தடையின்மை சான்றிதழ், நன்னடத்தை சான்றிதழ், அரசாங்க ஊழியர்கள் கடவுச்சீட்டு பெறுவதற்கான தடையின்மை சான்றிதழ் ஆகிய பத்து சேவைகளின் நடைமுறைகளை எளிமையாக்கி இருக்கிறார் முதலமைச்சர் அவர்கள். அனைத்தும் இணைய வழியில் எளிதில் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.**

இதன் மூலம் அரசு நிர்வாக நடைமுறை எளிமையாக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் அரசு சேவைகளை எளிதில் பெறலாம். நேரில் வரத் தேவையில்லை. காத்திருக்கத் தேவையில்லை, அலையத் தேவை இல்லை என்பது இத்திட்டத்தின் சிறப்பாகும்.

**முதலமைச்சர் செல்லும் இடமெல்லாம் மக்கள் மனுக்களைத் தருகிறார்கள் என்றால் அதில் இருந்து ஒரு நம்பிக்கை தெரிகிறது. 'முதலமைச்சரிடம் கோரிக்கை வைத்தால் நிறைவேறும்' என்பதுதான் அந்த நம்பிக்கை. அத்தகைய மாபெரும் நம்பிக்கையை மக்களிடம் பெற்றுள்ளார் முதலமைச்சர் அவர்கள்.**

உண்மையான மக்களாட்சி என்பது இப்படித்தான் நடக்கும். அதனைத் தான் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.



கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையிலான அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த எம்.பி.க்கள் குழு, நேற்று முன்தினம் (1.6.2025) ஸ்பெயின் நாட்டின் தலைநகரம் மேட்ரிட் நகரில் உள்ள மகாத்மா காந்தியின் முழுஉருவச் சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். அதன் பின்னர், ஸ்பெயின் நாட்டில் வாழும் பல தமிழர்கள் கனிமொழி கருணாநிதி அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக்கொண்டனர்.

### தீவிரவாதத்துக்கு எதிரான ஆபரேஷன் சிந்தூர் குறித்து எடுத்துக்கூற

## கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையிலான குழு ஸ்பெயின் சென்றது!

### ஸ்பெயின் நாட்டு அதிகாரிகளைச் சந்திக்கின்றனர்

மேட்ரிட், ஜீன் 3 -

தீவிரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாடு குறித்து விளக்குவதற்காக நாடாளுமன்ற திமுக குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி தலைமையிலான எம்.பி.க்கள் குழுவினர் ஸ்பெயின் சென்றடைந்தனர்.



தீவிரவாதத்துக்கு எதிராக இந்திய அரசு மேற்கொண்ட ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்தும் உலக நாடுகளுக்கு ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்ட எம்.பி.க்கள் குழு நேரில் சென்று விவரித்து வருகிறது. அந்தவகையில், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவர் கனிமொழி எம்.பி., தலைமையிலான குழு, ரஷ்யா, ஸ்பெயின், ஸ்லோவேனியா,

கிரீஸ், லாட்வியா ஆகிய நாடுகளுக்குச் சென்று விளக்கம் அளித்தது. இதனையடுத்து கனிமொழி கருணாநிதி தலைமையிலான குழு தனது பயணத்தின் அடுத்த கட்டமாக ஸ்பெயின் தலைநகர் மேட்ரிட் சென்றடைந்தது. ஸ்பெயினுக்கான இந்திய தூதர் தினேஷ் கே.பட்நாயக் இக்குழுவை வரவேற்றார். ஸ்பெயின் அரசு உயர் மட்ட அதிகாரிகளைச் சந்திக்கும் இக்குழுவினர், இந்திய வம்சாவளியினரை சந்தித்து உரையாடவும் திட்டமிட்டுள்ளனர்.

## தமிழ்நாடு முதலமைச்சரின் வழிகாட்டுதலின்கீழ் 'மதராசி கேம்ப்' திட்டம்!

### சொந்த மாவட்டங்களுக்குத் திரும்ப விரும்புபவர்களுக்கு அரசின் சார்பில் ஏற்பாடு!

சென்னை, ஜூன் 3 -

"மதராசி கேம்ப்" என்பது தெற்கு டெல்லி, நிஜாமுதீன் ரயில்வே நிலையத்துக்கு அருகிலுள்ள பராப்புல்லா ஜங்புரா வடிகாலின் கரையில் அமைந்துள்ள ஓரங்கட்டப்பட்ட குடிசை பகுதியாகும். இக்குடிசைப் பகுதியிலுள்ள 370 குடிசை வீடுகளில் பெரும்பாலானோர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களாக உள்ளனர்.

தில்லி உயர்நீதிமன்றம், "மதராசி கேம்ப்" என்பது பராப்புல்லா வடிகாலின் கரையில் கட்டப்பட்ட அனுமதியில்லாத கட்டடம் / ஆக்கிரமிப்பு எனக் குறிப்பிட்டுள்ளது. இதனால், வடிகாலில் அடைப்பு ஏற்பட்டு, சுற்றியுள்ள பகுதிகளில் குறிப்பாக மழைக்காலத்தில் கடுமையான நீர் தேக்கம் ஏற்படுகிறது.

எனவே, Delhi Urban Shelter Improvement Board (DUSIB) சட்டம் மற்றும் தில்லி சேரி மற்றும் ஜேஜே குடியிருப்பு இடமாற்றக் கொள்கை, 2015ன் கீழ் தகுதியான குடியிருப்பாளர்கள் இடமாற்றம் செய்யப்பட வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நீதிமன்றத்தின் உத்தரவுகளுக்கு இணங்க, குடியிருப்பாளர்களின் மறுவாழ்வு மற்றும் இடமாற்ற தகுதியை மதிப்பீடு செய்ய ஒரு விரிவான கணக்கெடுப்பு, தகுதி தீர்மானக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டது. இந்த செயல்முறை அடிப்படையில், 370 குடியிருப்பாளர்களில் 215 பேர் தகுதியுடையவர்களாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளனர். இந்தத் தகுதியுடைய பயனாளர்களுக்குத் தில்லி மேம்பாட்டு ஆணையத்தின் Delhi Urban Shelter Improvement Board (DUSIB) பொருளாதார ரீதியாக பலவீனமான பிரிவுக்கான (EWS) குடியிருப்பு யூனிட்டுகள், நரேலா, தில்லியில் ஒதுக்கப்பட்டுள்ளன.

மேலும், "மதராசி கேம்ப்" குடியிருப்பாளர்களால் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து சட்ட வழக்குகளும் தில்லி உயர் நீதிமன்றத்தால் 09.05.2025 தேதியிட்ட உத்தரவின் மூலம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. அந்த உத்தரவின் படி, 01.06.2025 முதல் "மதராசி கேம்ப்" பகுதிகளில் இடிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

"மதராசி கேம்ப்" பகுதியில் அனுமதியில்லாத கட்டிடங்களை இடிக்காமல் இருக்க குடி யிருப்பாளர்களுக்கு இருந்த அனைத்து சட்ட வழிகளும் முழுமையாக முடிவடைந்துவிட்டன.

தமிழ்நாட்டின் முதலமைச்சரின் உத்தரவின்படி, புது தில்லியில் உள்ள "தமிழ்நாடு இல்லம்" அலுவலகம், ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை செயல்படுத்துவதிலும் கண்காணிப்பதிலும் முக்கியப் பங்காற்றுகிறது. மாநிலத்துக்கு வெளியே வசிக்கும் தமிழர்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள தமிழ்நாடு அரசு, "மதராசி கேம்ப்" குடியிருப்பாளர்களுடன் நெருக்கமாக ஒருங்கிணைந்து, அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் தாமதமின்றி வழங்கப்படும் என்பதை உறுதி செய்கிறது.

தமிழ்நாடு முதலமைச்சரின் வழிநடத்தலின் கீழ், "மதராசி கேம்ப்" குடியிருப்பாளர்கள் தங்கள் சொந்த மாவட்டங்களுக்கு திரும்ப விரும்பினால், அவர்களுக்கு தமிழ்நாடு அரசு உதவிக்கரம் நீட்டும். வாழ்வாதாரம் மற்றும் தேவையான பிற அடிப்படை உதவிகளும் வழங்கப்படும். இந்த உதவிகள், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களின் அலுவலகம் மூலம் சரியான நேரத்தில் நடைமுறைப் படுத்தப்படும்.







கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (1.6.2025) மதுரை, கலைஞர் திடலில் திராவிட முன்னேற்றக் கழக பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், கழக பொதுச் செயலாளர் – நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொருளாளர் – நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு, கழக முதன்மை செயலாளர் – நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கழக துணை பொதுச் செயலாளர்கள் –ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ. பெரியசாமி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருச்சி சிவா, ஆ. இராசா, அந்தியூர் செல்வராஜ், மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், கழக மாவட்டச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### திருச்சி தெற்கு மாவட்டத்தில்

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் 102வது பிறந்த நாள்: திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு !

*திருச்சி, ஜூன் 3 -*

திருச்சி தெற்கு மாவட்ட திமுக சார்பில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுடைய 102வது பிறந்த நாளை முன்னிட்டு கழக தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலின்படி, இன்று (03.06.2025 - செவ்வாய்க் கிழமை) மதியம் 2 மணிக்கு திருச்சி டி.வி.எஸ். டோல் கேட் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையில் கழக நிர்வாகிகளுடன் சென்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்த உள்ளோம்.



முத்தமிழறிஞர் கலைஞர் 102வது பிறந்த நாளை முன்னிட்டு, இன்று (03.06.2025- செவ்வாய்க்கிழமை) காலை பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளைக் கழகங்களில் கழக இருவண்ண கொடியேற்றி முத்தமிழறிஞர் கலைஞர் திருஉருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை செய்திட கேட்டுக் கொள்கின்றேன்.

இந்த நிகழ்வில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு கிளைக் கழகச் செயலாளர் மற்றும் நிர்வாகிகள் மாவட்ட, மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழக தொண்டர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

### சென்னை திரும்பும் பயணிகளுக்கு அதிர்ச்சி:

# உள்நாட்டு விமான கட்டணங்கள் பல மடங்கு உயர்வு!

*சென்னை, ஜூன் 3 -*

மதுரை, தூத்துக்குடி, திருச்சி, கோவையிலிருந்து சென்னைக்கு வருவதற்கு விமான கட்டணங்கள் பல மடங்கு உயர்ந்துள்ளது.

வெளியூர் சென்றவர்கள் விமானங்களில் திரும்புவதால் உள்நாட்டு சென்னை விமான நிலையத்தில் பயணிகள் கூட்டம் அதிகரித்து காணப்படுகிறது.

மதுரை சென்னைக்கு சாதாரண நாட்களில் விமான கட்டணம் ரூ.4,542. இன்று கட்டணம் ரூ.18,127ஆக உயர்ந்துள்ளது.

தூத்துக்குடியில் இருந்து சென்னைக்கு விமான கட்டணம் ரூ.4.214ஆக இருந்த நிலையில் ரூ.17,401 ஆக உயர்ந்துள்ளது. திருச்சி சென்னை இடையே சாதாரண நாட்களில் கட்டணம் ரூ.2,334. இன்றைய தினம் கட்டணம் ரூ.9,164 ஆக உயர்ந்து காணப்படுகிறது.

இதனால், விமானப் பயணிகள் மிகவும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர். பல மடங்கு அதிக விமான கட்டணம் கொடுத்து சொந்த ஊர்களில் இருந்தும் சுற்றுலா தலங்களில் இருந்தும் பயணிகள் பயணித்து வருகின்றனர்.

